**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.224/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வளர்மதி | Prosecution | LW-1 as PW1. |
| Father Name | க/பெ.ரவிச்சந்திரன் | Defence | |
| Village | கூத்தானூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 50/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**13.10.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் எனது சின்ன மாமனாரின் மகன் ஆவார். கடந்த 11.07.2024 ம் தேதி இரவு 8.30 மணியளவில் பழையாரில் வேலை செய்து விட்டு வீடு திரும்பினேன். அப்போது ஆஜர் எதிரி கையில் கழி வைத்துக்கொண்டு குடி போதையில் நின்று கொண்டிருந்தார். நான் எனது மருமகள் சுபாவிடம் ஏன் ஆஜர் எதிரி இவ்வாறு நின்று கொண்டிருந்கிறார் என்று கேட்டேன். அதற்கு எனது மருமகள் அன்றைய தினம் மாலை 4.00 மணியிலிருந்து இவ்வாறு தான் ஆஜர் எதிரி தகறாறு செய்து கொண்டிருக்கிறார் என்று தெரிவித்தார். அன்றைய தினம் எனது மகன் கோயம்புத்துாரில் வேலைக்காக சென்றிருந்தார். எனது கணவரும் கல் அறுப்பதற்காக கேரளா சென்றிருந்தார். வீட்டில் நாங்கள் இருவரும் தனியாக இருப்பதை எண்ணி ஆஜர் எதிரியும், மது போதையில் இருப்பதால் அவரிடம் எதுவும் பேசாமல் நான் வீட்டுக்குள்ளேயே இருந்தேன்.

அப்போது திடீரென்று ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்குள் நுழைந்து எனது தலை முடியை பிடித்து இழுத்துக்கொண்டே ரோட்டில் கீழே தள்ளி குச்சிக்காரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டி ரோட்டில் கிடந்த கட்டையில் எனது தலையை முட்டினார். அதன் பின் நான் சுய நினைவு

இழந்துவிட்டேன். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி GHயில் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். சிகிச்சையில் இருந்த போது புதுப்பட்டினம் போலிசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்த்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்பட்டது.**